

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டம், சோழவந்தான் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் ஒன்றியம் சால்வார்பட்டி, வாவிடமருதூர் மற்றும் 15பி மேட்டுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் கட்சிப் பாகுபாடின்றி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், ஒன்றிய பொறுப்பாளர்கள் முத்தையன், தன்ராஜ், பரந்தாமன், அருண், பேரூர் செயலாளர் ரகுபதி, அலங்காநல்லூர் பேரூராட்சி சேர்மன் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணை சேர்மன் சாமிநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் மக்களிடம் விண்ணப்பங்கள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பெற்றுக் கொண்டு, விவரங்களைக் கேட்டறிந்தார்!

புதுக்கோட்டை. ஜூலை 25-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் சுயஉதவிக்குழு கட்டடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் மு. அருணா தலைமையில் 22.07.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

பின்னர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

“உங்களுடன்ஸ்டாலின்” திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதி களில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக் கக்கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் சுயஉதவிக்குழு கட்டடத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் கலந்துகொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறியப்பட்டது.

2 மேலும், 23.07.2025 அன்று “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது, இலுப்பூர் பேரூராட்சி பகுதி பொதுமக்களுக்கு இலுப்பூர், அந்தோணியார் தெரு, திருவள்ளுவர் மக்கள் மன்றத்திலும், திருவரங்குளம் 2 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு பூவர சக்குடி சமுதாயக் கூடத்திலும், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு குளவாய்ப்பட்டி சேவை மையக் கட்டிடத்திலும், கறம்பக்குடி 1 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு முத்து லெட்சுமி திருமண மண்டபத்திலும், புதுக்கோட்டை 2 ஊராட்சி ஒன்றிய பகுதி பொதுமக்களுக்கு பெருங்களூர் பிடாரி அம்மன் திருமண மஹாலிலும் நடைபெற உள்ளது.

அதனடிப்படையில் இம்முகாமானது, புதுக்கோட்டை மாவட்டத்தில், மாநகராட்சி பகுதியில் 29 முகாம்களும், அறந்தாங்கி நகராட்சி பகுதியில் 10 முகாம்களும், பொன்னமராவதி, கறம்பக்குடி, ஆலங்குடி, கீரனூர், கீரமங்கலம், இலுப்பூர், அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய 8 பேரூராட்சி பகுதிகளில் தலா இரண்டு வீதம் 16 முகாம்களும், ஊராட்சி பகுதிகளில் 151 முகாம்களும், பெரிய நகரங்களில் 7 முகாம்களும் ஆக மொத்தம் 213 முகாம்கள் 15.07.2025 முதல் 21.10.2025 வரை நடத்தப்பட உள்ளன. இதுவரை புதுக்கோட்டை மாவட்டத்தில், 19 முகாம்கள் நடைபெற்றதில் 4,844 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 365 விண்ணப்ப ங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.


முன்னதாக, பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆலங்குடி பேரூராட்சி, மங்கள மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், மக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

இம்முகாம்களில், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ரேவதி, ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் மு.ராசி முருகானந்தம், பேரூராட்சி துணைத் தலைவர் ராஜேஸ்வரி பழனிக்குமார், உதவி செயற்பொறியாளர் தமயந்தி, வட்டாட்சியர்கள் பி.வில்லியம் மோசஸ் (ஆலங்குடி), க.கருப்பையா (அறந்தாங்கி) பேரூராட்சி செயல் அலுவலர் இ.கோமதி மற்றும் கே.பி.கே.டி.தங்கமணி, எல்.குமார் (எ) துரைக்கண்ணு, சண்முகநாதன், ஆர்.வி.செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை இரா. காசிச்சாமி

ஜூலை 25 (1992)



தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்த இவர் சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றில் தீவிரமாய் பணியாற்றி, கழகம் துவக்க காலம் முதல் கழகப் பணியாற்றத் தொடங்கினார். 1952 முதல் சென்னை மாவட்டத்தில் கீழ்ப்பாக்கம் பகுதியிலும் பின்னர், மயிலை பகுதியில் தனது இறுதிநாள் வரை கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், ஈழத்தமிழர் பாதுகாப்பு போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

1968ஆம் ஆண்டு மயிலை பகுதி, 94வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் தொடர்ந்து மயிலை வார்டு குழுத் தலைவராகவும் சிறப்பாக பணியாற்றி பொதுமக்களிடம் பாராட்டைப் பெற்றவர்.

இவர் பகுதிக் கழகப் பொறுப்பாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

தமிழ்நாடு வணிகர்களின் மத்தியில் கழக உணர்வை வளர்த்து அதனடிப்படையில், தமிழ்நாடு வர்த்தக கழக பொதுச்செயலாளர் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “மயிலையில் கழகம் வளர்த்த சிங்கம்” என பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தேனி தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள்து, ணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கம்பம் தனியார் மண்டபத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மகாராஜன் எம்.எல்.ஏ. கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆண்டிபட்டி தொகுதி பார்வையாளர் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார். தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கம்பம் தெற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் ஹரிஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார். கம்பம் வடக்கு நகர இளைஞர் அணி அமைப்பாளர் சலிம் ரகுமான் நன்றி உரையாற்றினார் மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சுல்தான்பேட்டை அரசுப் பள்ளியில் ஓவியக் கண்காட்சி!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா துவக்கி வைத்தார் !

புதுச்சேரி, ஜூலை 25 -

வில்லியனூர் சட்டமன்ற தொகுதி சுல்தான் பேட்டை கண்ணியமிகு காயிதே மில்லத் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 221 மாணவர்களும் 221 ஓவியங்களை வரைந்து “பதிவுகள்” என்ற தலைப்பில் ஓவியக் கண்காட்சி துவக்க விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விரிவுரையாளர் ராமலிங்கம் வரவேற்று பேசினார். பள்ளி துணை முதல்வர் மோகன் முன்னிலை வகித்தார்.

இந்த விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களின் படைப்புகள் அடங்கிய ஓவியக்கண்காட்சியை திறந்து வைத்து, மாணவர்களின் வண்ணமயமான ஓவியங்களை பார்வையிட்டார்.

தொடர்ந்து கண்காட்சியில் பங்கேற்ற 221 மாணவர்களை பாராட்டி விருது வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர், கண்காட்சியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார். மேலும் பள்ளி வளாகத்தில் தேசத் தலைவர்களின் உருவங்களை வரைந்து பள்ளிக்கு அழகு சேர்த்த நுண்கலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி கவுரவித்தார். முன்னதாக கண்ணியமிகு காயிதே மில்லத் அரசு மேல்நிலைப் பள்ளியில் 10 மற்றும் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா அவர்கள் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

இதில், நுண்கலை ஆசிரியர்கள் முருகேச பாரதி, கிருஷ்ணன், அந்தோணியம்மாள், ஆசிரியர்கள் நேரு, ஜெயராக்கினி, அனிதா ஜெனிபர், ராகவன் மற்றும் ஆர்.ஆர் கன்ஷ்ட்ரக்ஷன் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், ஓய்வு பெற்ற துணை முதல்வர் சந்திரா, தலைமை ஆசிரியர் உமா, ஆசிரியர் சுகுமாரன், சுவரோவியம் வரைந்த ஆசிரியர்கள் அன்பழகன், சோமலிங்கம், பழனிவேல், பெற்றோர்கள் கௌசல்யா, அபு சுகுத்து, தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் ஜமாத்தார்கள், ஊர் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக நுண்கலை ஆசிரியர் ஆனந்தராஜ் நன்றியுரை நிகழ்த்தினார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், ஜூலை 25 -

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 27.07.2025 ஞாயிறு அன்று சாக்கோட்டையில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்திற்கு அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டி தஞ்சைவடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக் கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : வருகின்ற 27.07.2025 ஞாயிறு காலை 10.00 மணியளவில் சாக்கோட்டை அன்பு மஹாலில் தஞ்சை வடக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழக அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாண சுந்தரம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முனைவர் செ.குறிஞ்சிவாணன் (திருவிடைமருதூர்), ரமேஷ் ராஜேந்திரன் (கும்பகோணம்), பி.எம். ஆனந்த் (பாபநாசம்), ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுசமயம் கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

கூட்டத்தின் பொருள் : 1. ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை, 2. தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மூன்று தொகுதிகளிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது. 3.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக் கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### மதுரவாயலில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

சென்னை, ஜூலை 25 –

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–148, நெற்குன்றம், என்.டி. படேல் சாலை, ஜி.எம். மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக் கைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், தலைமை பொது குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பா ண்டியன், வட்டக் கழகச் செயலாள ர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், தி.சார்லஸ், ஆ.செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் வி.வி.கிரிதரன் எம்.சி., செல்வி ரமேஷ் எம்.சி., மற்றும் கழக நிர்வாகி கள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பே. மாரி அய்யா

ஜூலை 25 (2020)



கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவராக, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்ததோடு, தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கந்தர்வக்கோட்டை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கோமாபுரம் ஊராட்சி மன்றத் தலைவராக – கந்தர்வக்கோட்டை ஒன்றிய பெருந்தலைவராக – விராலிப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி தலைவராக பதவி வகித்ததோடு, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “கந்தர்வக்கோட்டை கட்டபொம்மன்” என்றும் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் “மாரி அய்யா கொள்கை மாறாத அய்யா” என்றும் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.